(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 3(3).]**

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 சனவரி 09, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2026 சனவரி 20, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 திசெம்பர் 15 ஆம் திகதிய 2467/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.01.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2026 சனவரி 21, புதன்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2026 பெப்ரவரி 03, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

21/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்கள் சென்றுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் அவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்ற ஊழியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அந்நியச் செலாவணியின் மொத்தப் பெறுமதி ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவர்களின் நலனோம்புகை தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

119/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த வரியைக் குறைப்பதற்கு அப்போதைய அரசாங்கம் தீர்மானித்த திகதி யாதென்பதையும்;

(ii) அத்தீர்மானத்தை மேற்கொள்வதற்கு தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த வரி குறைக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு சீனியை இறக்குமதி செய்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தால் இழக்கப்பட்ட வரி வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி சீனி வரி மோசடி தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

207/2024

கௌவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைத் தாபித்ததன் நோக்கங்கள் யாவை என்பதயும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை பாடசாலைகளிலும், மத்திய நிலையங்களிலும் விநியோகிக்கப்படாமல் எஞ்சியிருந்த பாடசாலைப் பாட நூல் பிரதிகளின் எண்ணிக்கை மற்றும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட பாடசாலைப் பாடநூல் பிரதிகளின் எண்ணிக்கை என்பன ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைப் பாடநூல்களின் நிதிசார் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) பாடசாலைப் பாடநூல்களின் பயன்பாடு குறைந்தளவில் காணப்பட்ட, 2021 ஆம் ஆண்டு அவற்றை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(v) உரிய காலத்தில் பாடசாலை பாடநூல்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

345/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனையறுப்பான், பன்சேனை, வாதக்கல்மடு, பாவற்கொடிசேனை, உன்னிச்சை மற்றும் நெடியமடு போன்ற பிரதேசங்களுக்கு இதுவரை குடிநீர் வசதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) உன்னிச்சையிலிருந்து பல்வேறு பிரதேசங்களுக்கு குடிநீர் கொண்டு செல்லப்பட்ட போதிலும், உன்னிச்சை மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அப்பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகள் வழங்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

563/2025

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில், திரப்பனை, மீவெல்லேவ, 'சேனக்கபுர யாய' எனும் பெயரில் ஒரு அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இந்த அணைக்கட்டின் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட அணைக்கட்டின் மூலம் நீர் பாய்ச்சப்படும் வயற் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(v) மேற்படி அணைக்கட்டு காரணமாக இன்றளவில் வயற்காணிகளில் மணல் நிரம்புவதால் விவசாயிகள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

627/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையானது, இலங்கையிலுள்ள ஆகக்கூடிய வருமானத்தை ஈட்டுகின்ற உள்ளூராட்சி நிறுவனம் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் வருமான வரியை சேகரிப்பதற்காக இருக்க வேண்டிய வருமான வரி பரிசோதகர்களின் எண்ணிக்கை, தற்போது கடமையாற்றுகின்ற வருமான வரி பரிசோதகர்களின் எண்ணிக்கை மற்றும் வருமான வரி பரிசோதகர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

662/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயர் பதவிகளில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது அவர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பதிரங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கு தகுதிபெறும் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்கள் தற்போதும் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டமையால் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத ஓய்வூதியதாரர்களுக்கு அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1263/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கன் விமானச் சேவை நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு இன்றளவில் செலுத்தப்படும் கொடுப்பனவு வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கொடுப்பனவு வகையின் பிரகாரம் செலுத்தப்படும் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) வெளிநாட்டு விமானப் பயணங்களின்போது பணியாட்டொகுதிக்கு தங்குமிடங்களுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி தங்குமிட கொடுப்பனவு வகைகள் யாவை என்பதையும்;

(v) அதற்குரிய தொகை யாதென்பதையும்;

(vi) விமானப் பயணங்களின்போது பணியாட்டொகுதிக்கு உணவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(vii) இன்றேல், அதற்காக கொடுப்பனவொன்று செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(viii) ஆமெனில், அக்கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தில் பிரதம நிறைவேற்று அலுவலரொருவரின்றி அதன் நிருவாக நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) அதற்குரிய பொறுப்புகளை ஏற்கின்றவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1716/2025

கௌரவ ஆர். ஜீ. விஜேரத்ன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசியக் கணக்கீட்டுப் பிரிவில் கடமையாற்றிய அலுவலர் ஒருவரின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலரின் பெயர் யாது என்பதையும்;

(iii) குறித்த அலுவலருக்கான நீதி மற்றும் நியாயம் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொருளாதாரம் பற்றிய மிகவும் கூருணர்வுமிக்கதான தரவுகள் திரிபுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்காக தற்போதைய அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வேலைத்திட்டம் யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1795/2025

கௌரவ சட்டத்தரணி ரவுப் ஹகீம்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இடவசதிகள் மற்றும் வகுப்பறை வசதிகள் போதுமானதாக இல்லை என்பதை அறிவாரா;

(ii) எட்டு புதிய வகுப்பறைகளின் தேவைப்பாடு காணப்படுவதோடு, அதற்காக வழங்கப்படும் தீர்வு யாது;

(iii) 2026 வரவுசெலவு திட்டத்தின் மூலம் மேற்படி பாடசாலையின் கட்டிட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக போதுமான ஒதுக்கீடுகள் வழங்கப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 பெப்ரவரி 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

313/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் 2015 முதல் இற்றைவரை இயங்கிவரும் தனியார் மின்சார உற்பத்திக் கம்பனிகளின் எண்ணிக்கையினை ஒவ்வொரு வருடத்திற்குமென வெவ்வேறாகவும்;

(ii) அவ் ஒவ்வொரு கம்பனியினதும் பெயர் மற்றும் முகவரியை அதனால் உற்பத்தி செய்யப்படும் கொள்ளளவுடன் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2015 முதல் இற்றைவரை இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய மின்சார அலகுகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தொகை என்பவற்றை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மின்சார உற்பத்திக் கொள்ளளவை அதிகரிப்பதற்காக இலங்கை மின்சார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இந்த மின்சார உற்பத்தி முறைமைகள் புதுப்பிக்கத்தக்கனவா அல்லது அனல் மின்சாரத்திற்குரியனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

882/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேசச் செயலாளர் பிரிவில் அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமப் பத்திரங்கள்' ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய தகவல்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

912/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு அனுபவம் மற்றும் திறன்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக 2020/2021(2022) பரீட்சையொன்று நடாத்தப்பட்டுள்ளமையை அறிவாரா;

(ii) மேற்படி பரீட்சைக்கு தோற்றியுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பரீட்சார்த்திகளின் தகவல்கள் கோரப்பட்டுள்ளனவா;

(iv) நியமனங்களை வழங்குவதற்காக பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

(vi) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாது;

(vii) மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான அளவுகோல்கள் யாவை;

(viii) நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பரீட்சை பெறுபேறுகள், கோரப்பட்ட தகவல்கள் மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாது;

(iii) வழங்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) ஓய்வுபெற்றவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், அவர்களின் பெயர்கள் யாவை;

(vi) ஓய்வுபெற்றவர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1064/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுபான விற்பனைக்காக இதுவரையில் வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வ அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி அனுமதிப்பத்திர வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரதாரர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள மதுபான வடிசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வடிசாலை அனுமதிப்பத்திரதாரர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உள்ளூரில் தயாரிக்கப்படும் மதுபான போத்தல் ஒன்றுக்கு அறவிடப்படும் வரி எவ்வளவு என்பதையும்;

(ii) அதனூடாக 2024 ஆம் ஆண்டில் மதுவரித் திணைக்களம் ஈட்டிக் கொண்டுள்ள மொத்த வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட மதுபான போத்தல்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1243/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024-2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள காணிகளை நிரப்புவதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள மொத்த வயற் காணிகளின் அளவு, அத்தகைய ஒவ்வொரு வயற் காணியின் உரிமையாளரின் பெயர், அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள வயற் காணியின் பரப்பளவு மற்றும் அங்கீகாரம் அளித்தமைக்கான காரணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்கமைவாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வழங்கப்பட்டுள்ள கடிதங்களின் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1297/2025

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் கிளினிக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் மூலம் சேவைகளைப் பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தை நிருவகிப்பதற்கு நிரந்தர பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(iv) இன்றேல், நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முறைமை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எயிட்ஸ் நோயைத் தடுப்பதற்காக வழங்கப்படுகின்ற pre-exposure prophylaxis ஔடதத்தின் தற்போதைய கையிருப்பு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஔடதம் இலங்கைக்கு அன்பளிப்பாக கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஔடதத்தை வழங்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி ஔடதம் பெற்றுக்கொள்ளப்படும் முறைமை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) எயிட்ஸ் நோய்க்கு வழங்கப்படும் வைரஸ் தடுப்பு ஔடதங்களாகிய Tenofovir, Lamivudine மற்றும் Dolutegravir ஆகிய ஒவ்வொரு ஔடதங்களின் தற்போதைய கையிருப்பின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) எயிட்ஸ் நோயாளர்களுக்கான அத்தியாவசிய வைரஸ் தடுப்பு ஔடதங்களில் பற்றாக்குறை காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பில் பொறுப்பு வகிக்கின்றவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி பற்றாக்குறை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1327/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள A, B, C மற்றும் D தரங்களைச் சார்ந்த வீதிகளின் தூரம், ஒவ்வொரு தரம் வாரியாக வெவ்வேறாக கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தரத்தைச் சார்ந்த வீதிகளையும் பராமரிக்கும் நிறுவனங்கள், வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதிகளை அபிவிருத்திச் செய்வதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்கள் மூலம் அபிவிருத்திச் செய்யப்பட்ட வீதிகளின் தூரம் கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(iii) அக்கருத்திட்டங்கள் மூலம் குருநாகல் மாவட்டத்தில், வீதிகள் நிர்மாணிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வீதிகளின் தூரம் கிலோமீற்றர்களில் யாதென்பதையும்;

(v) அதற்காகச் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1430/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெலிமடை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அலங்காலகால கிராம அலுவலர் பிரிவின், ஹரக்கமகந்த கிராமத்தில் சுமார் ஐந்து ஏக்கர் பரப்பளவைக் கொண்ட அரச காணி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் காணி கூட்டுத்தாபனத்திற்கு முறைப்படி கையுதிர்ப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கூட்டுத்தாபனத்தினால் மேற்படிக் காணி மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அது சட்டரீதியானதா என்பதையும்;

(v) அந்த மூன்றாம் தரப்பினர் யாவர் என்பதையும்;

(vi) சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பினரால் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரி நிலுவைத்தொகை செலுத்த வேண்டியிருக்கும்போது, மேற்படி காணியை ஒரு தனியார் வங்கியில் அடகு வைத்து கடன் தொகையொன்றைப் பெற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சட்டவிரோதமற்றதா என்பதையும்;

(iii) மேற்படி காணியை சாட்டுதல் செய்கையில் மற்றும் வரி நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் கடன் தொகையொன்றைப் பெற நடவடிக்கை எடுத்திருப்பதன் மூலம் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் சட்டத்தை மீறியுள்ளதா என்பதையும்;

(iv) அந்தக் காணியை அரசாங்கத்திற்கு மீளக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1491/2025

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எக்ஸ்-பிரஸ் பேர்ள் (X-Press Pearl) கப்பல் விபத்து இலங்கையின் மீனவர் சமூகத்திற்கு மோசமான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக மேற்படி கடற்றொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இதுவரையில் வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) புத்தளம் மாவட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காகத் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1762/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை, நிதி ஊழல்கள் தொடர்பாக சட்டத்துறை தலைமை அதிபதியினால் மேல்நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் வாபஸ் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த வழக்குகளில் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு சட்டத்துறை தலைமை அதிபதியினால் மீள தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 பெப்ரவரி 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

679/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில், நிலக்கரி எரியூட்டப்பட்ட பின்னர் சேரும் சாம்பல் விற்பனை மூலம் 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சாம்பல் விற்பனையின்போது பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாதென்பதையும்

(iii) அவ்வாறு ஈட்டியுள்ள வருமானத்திலிருந்து இந்த மின் உற்பத்தி நிலையத்தின் சுற்றயலில் வசிக்கின்ற அத்துடன் சூழல்சார் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மக்களின் நலனோம்புகைக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

743/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது பதில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்களாக பணியாற்றுகின்றவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்கள் தமது சேவையினை நிரந்தமாக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

811/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள, மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் உரித்தான பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை;

(iii) இன்றளவில் அந்த பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் வெற்றிடங்கள் ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iv) கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1012/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடன் அட்டை மோசடி, நிகழ்நிலை வங்கி மோசடி, மின்னஞ்சல்/நிகழ்நிலை ஏமாற்று மோசடி (phishing), சிம் அட்டை மாற்று மோசடி (sim swapping), முதலீட்டு மோசடிகள், டிஜிட்டல் பணப்பை மோசடி மற்றும் ஏனைய தொடர்புடைய குற்றங்களாக வகைப்படுத்தப்பட்ட, நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருட காலப்பகுதியில் ஏதேனும் குறிப்பிட்ட வகையான நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல் கணிசமான அதிகரிப்பு ஒன்றைக் காட்டியுள்ளதா என்பதையும்;

(iii) வட மாகாணத்திலும் தேசிய ரீதியிலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல்களின் போக்குகள் அல்லது வடிவங்கள் தொடர்பாகவும்;

(iv) மாவட்டங்கள் மற்றும் மாகாணங்கள் பூராகவும் நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல்களைக் கண்காணித்தல், பின்தொடர்தல் மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றிற்கு மையப்படுத்தப்பட்ட பொறிமுறை ஒன்று காணப்படுகிறதா என்பதையும்;

(v) அத்தகைய தரவுகள் பகிரங்கமாக அணுகப்படக்கூடியவையாக அல்லது நிதி தொடர்பான நிறுவனங்களுடன் பகிரப்படக்கூடியவையாக உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1301/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்கறைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் வலயத்தின், குருந்தன் குளம் கண்டம் RB35 பிரதான வாய்க்காலில் கட்டுப்பாட்டுக் கதவை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டறிக்கையை சமர்ப்பிக்குமாறு DI/AM/ WG/002/2021 ஆம் இலக்க, 2021.05.05 ஆம் திகதிய கடிதத்தின் வாயிலாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) இக்கடிதம் அனுப்பப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் இற்றைவரை அந்த மதிப்பீட்டறிக்கை வழங்கப்படவில்லையென்பதையும்;

(iii) இதன் காரணமாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் மீண்டும் DI/AM/ WG/AP/002/2023 ஆம் இலக்க, 2023.09.20 ஆம் திகதிய நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுக் கதவை நிர்மாணிப்பதற்கு இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1369/2025

கௌரவ சட்டத்தரணி (திருமதி) சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை அரச பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்களின் காரணமாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருப்பின் அவ்வெண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அவ்வாறு பாடசாலைகளிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் தற்கொலைகள் இடம்பெற்றமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை பாடசாலைக் கட்டமைப்பில் துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இடம்பெறுவதை நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1563/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பல்கலைக்கழகங்களில் கல்விசார் பணியாட்டொகுதியில் தற்பொழுது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உருகுணை பல்கலைக்கழகத்தில் 2023ஆம் ஆண்டில் இணைச் சுகாதார பாடநெறிகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான பாடநெறிகள் இதுவரையில் ஆரம்பிக்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பாடநெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1571/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி அலுவலகங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) பிரதேச செயலாளர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான வாகனங்கள் தற்போது காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இன்றேல், பொருத்தமான வாகனங்கள் இல்லாத செயலகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) பிரதேச செயலாளர்கள் களச் சேவைகளை வினைத்திறனாக ஆற்றும் பொருட்டு புதிய வாகனங்களை வழங்குவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள வாகனங்களை பராமரிப்பதற்கு அரசாங்கத்திடம் முறையான மற்றும் துரித வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vi) பிரதேச செயலாளர்கள் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான வாகனங்கள் தற்போது அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அவற்றை வழங்குவதற்கான ஒரு உத்தேச காலவரையறையும் அதற்காக வரவு செலவுத்திட்ட ரீதியிலான நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1651/2025

கௌரவ சுனில் ரத்னசிறி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கலாசார நிதியம் 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை, அதனது நிதியை சமயத் தலங்களின் மறுசீரமைப்புக்காக பயன்படுத்தி உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய புனரமைப்புகள் மத்திய கலாசார நிதியத்தின் எப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகள் உரிய பெறுகை செயன்முறைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சமய மற்றும் கலைப் பணிகள் ஊக்குவிப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக செயலாற்றிய அலுவலர்கள் வெவ்வேறாக யாவர் என்பதையும்;

(ii) மேற்படி பிரிவின் பணிப்பாளரை நியமனம் செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) '*சிசு தஹம் செவண*' நாடு தழுவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்திட்டத்தின் ஊடாக அறநெறிப் பாடசாலை கட்டடமொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகள் / சமய தலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1655/2025

கௌரவ சானக மாதுகொட,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டம் (Inclusive Connectivity & Development Project) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு வீதியினதும் பெயர் மற்றும் செலவிடப்பட்ட தொகை மாவட்ட வாரியாக யாதென்பதையும்;

(iv) அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அப்பணிகள் நிறைவு பெறாமலுள்ள வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படிக் கருத்திட்டம் காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) காலி மாவட்டத்திற்கு ஏற்புடையதாக மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டத்தை காலி மாவட்டத்தில் ஆரம்பிக்க நீண்ட காலம் எடுத்தமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கை பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— “ரட்டவிருவன்” (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 60/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தல்,— கடந்த காலத்தில் பாடசாலை ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உளவள ஆலோசனைக்கான பிரிவொன்றை நிறுவுதல், மாவட்டச் செயலகம் ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான அலகு ஒன்றை நிறுவுதல், அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் உளவள ஆலோசனைக்கான டிப்ளோமா கற்கைநெறிகள், பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் பட்டமேற்படிப்பு கற்கைநெறிகளைப் போதித்தல், மன அழுத்தத்திற்குத் தீர்வுகாண ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையிலும் உளவியல் மருத்துவப் பிரிவுகளை ஆரம்பித்தல் போன்றவற்றால் இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளதால் அரசியல் அதிகாரத்தார், அரசாங்க அலுவலர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அத்தகைய செயற்பாடுகளில் தீவிரமாக இடையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 61/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு பாதகமான உணவு வகைகளை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்,— இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவலாக கண்டறியப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாலும், நீரிழிவு நோய்க்கு உணவு வகைகளுடன் உணவுப் பழக்கம் மற்றும் உணவு முறை ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் பாடசாலை கட்டமைப்பில் அமைந்துள்ள பாடசாலை உணவகங்களில் நீரிழிவு நோய்க்கு காரணமாகவுள்ள சீனி மற்றும் மா கலந்த உணவுகளுடன் பிரைட் ரைஸ், கொத்து, துரித நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பெருமளவில் மாணவர்களுக்கு விற்கப்படுவதாலும், எமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலை உணவகங்களில் விற்கப்பட வேண்டிய உணவு மற்றும் பான வகைகள் தொடர்பாக அரசாங்கம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரதத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத்தை ஒரு உயிர்ப்பான கலாசாரப் பயண முடிவிடமாக மாற்றமுடியுமென்பதால், யாழ்ப்பாணமும் இலங்கையின் வட மாகாணமும் பிரதான கேந்திர இடங்களாக அங்கீகரிப்பதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பிரதேசத்தின் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தல், உண்மையான சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்தல், இலங்கையின் வட மாகாணத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் அவர்களின் திருப்தியையும் அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் இணைப்பு மற்றும் விற்பனையை மேம்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் முதலீடுகளுக்காக ஆதரவளிக்கின்ற, பிரதேசத்தில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்பாட்டாளர்களை வலுவூட்டுகின்ற மற்றும் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்தும் சுற்றுலாத்துறைச் சேவை வணிகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதன் மூலமும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுற்றுலா கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துகின்ற அரச-தனியார் பங்காண்மையை மேம்படுத்துவதன் மூலமும் 12 முதல் 18 மாதங்களில் நிலைபேறான பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ளும் இலக்கை நோக்காகக் கொண்டு பிராந்தியத்தின் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் மீது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணிப்பதனூடாக யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட சுற்றுலா தளமொன்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியும் என்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/2025

கௌரவ கந்தசாமி பிரபு,— பால் உற்பத்தியில் தன்னிறைவினை ஊக்குவித்தல்,— நாடு தற்போது பால் இறக்குமதியில் தங்கியிருப்பது கணிசமான அந்நியச் செலாவணி இழப்புக்கு இட்டுச்செல்வதாலும், சிறந்த இன மாடுகளுக்கான, கால்நடைச் சேவைகளுக்கான, தீவனத்துக்கான மற்றும் உட்கட்டமைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகங்கொடுப்பதாலும், மேலும், இச்சவால்களைத் தீர்ப்பது உணவுப் பாதுகாப்பினை அதிகரித்து, கிராமியத் தொழில்களை உருவாக்கி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக் குறைப்பதாலும், சிறந்த இன மாடுகளுக்கான அணுகல் மற்றும் கால்நடைச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும் தீவனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலமும் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலமும் பாற் பண்ணை விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அரச – தனியார் பங்காண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தி தொடர்பான ஆய்வினை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்காக அரசாங்கத்தினால் தேசிய பால் அபிவிருத்திக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பாலுற்பத்தியாளர் குழுக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்றத்தின் சம்பந்தப்பட்ட குழு இதன் அமுல்படுத்தலைக் கண்காணித்து, மேலதிக நடவடிக்கைகளை விதந்துரைக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல்,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான புகையிரதப் பாதை மற்றும் மாத்தறையிலிருந்து கல்முனை வரையான புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதன் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்களுக்கு பயன் கிடைப்பதனால், மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— *நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,—* நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்களின் எண்ணிக்கை, அவ்வாறு தகனம் செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் போன்ற தகவல்களை விசாரிப்பதற்கும், இறந்தவர்களின் ஜனாஸாக்களை இவ்வாறு வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்படவர்களின் உறவினர்களின் மனநிலை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல் களுக்கு முரணாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.81/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பழச்சந்தையில் இயற்கையாகப் பழுத்த பழங்களுக்குப் பதிலாக, இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி அவற்றை செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இறக்குமதி செய்யப்படும் பழங்களையும் இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இப்பழங்களை பிள்ளைகள் அதிகம் உட்கொள்வதாலும், நேர்மையற்ற வணிகர்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தை அழிவுக்குட்படுத்தி மேற்கொண்டுவரும் இச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு உரிய வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையில் வன விலங்குகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேசியக் கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்தல்,— இலங்கை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமை நிறைந்த ஒரு நாடாக கருதப்படுவதாலும், காடழிப்பு, மனிதர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக சட்ட விரோத வன விலங்கு வர்த்தகம், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்குமிடையே அதிகரித்து வரும் மோதல்கள் காரணத்தினால் வருடாந்தம் வன விலங்குகளினதும் மனித உயிர்களினதும் இழப்பு பெருமளவில் இடம்பெறுவதாலும், புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் தேசிய வன விலங்குகள் முகாமைத்துவக் கொள்கையொன்றை வகுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக இருப்பதாலும், அதன் மூலம் விலங்குகளின் வாழ்விடங்கள் பாதுகாக்கப்படல், மனிதனுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் குறைவடைதல் உள்ளடங்கலாக விவசாயிகளின் பொருளாதார நிலையும் சமூக வாழ்க்கைத் தரமும் மேம்படுவதாலும், அதன் பொருட்டு செயற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான நவீன கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்து செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 % மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் “கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்” என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 93/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— அபிவிருத்தியில் நிலவும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு தனியானதொரு விசேட அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்,— வட மாகாணம், கிழக்கு மாகாணம், மொனராகல மாவட்டம் மற்றும் நுவரெலியா மாவட்டம் போன்ற பின்தங்கிய பிராந்தியங்கள் நீடித்து நிலவிய சிவில் முரண்பாடுகளின் தாக்கங்களாலும் வரலாற்று ரீதியான புறக்கணிப்புக்களாலும் தொடர்ந்தும் பல தசாப்தங்களாக கடுமையான பொருளாதார இழப்புக்களுக்கு முகங்கொடுத்து வருவதாலும்; தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இப்பின்தங்கிய பிராந்தியங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் மீது பாரபட்சமான சுமைகள் திணிக்கப்பட்டுள்ளதால் இந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் உக்கிரமடைந்துள்ளதாலும்; பொருளாதார ரீதியில் பின்னடைந்த இந்தப் பிரதேசங்களில் ஒப்புரவுமிக்க வளர்ச்சியையும், நிலைபெறுதகு அபிவிருத்தியையும் பால்நிலை வலுவூட்டலையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் இக்கரிசனைக்குரிய விடயங்களை நிவர்த்தி செய்வதற்கென தனியானதொரு தேசிய முன்னெடுப்பினைத் தாபிப்பது அவசியமாக இருப்பதாலும்; 250 மில்லியன் டொலர் தொகையினை இலக்காகக் கொண்டு, 10+2 ஆண்டு காலப்பகுதியிலான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரசாங்கத்திடமிருந்தும் இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளர்களிடமிருந்தும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்தும் மனிதாபிமானக் கொடையாளர்களிடமிருந்தும் கிடைக்கின்ற பங்களிப்புகளைத் திரட்டுவதற்கு ஒரு தேசிய அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதற்கும்; அந்த நிதியினை விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் என்பவற்றின் மூலம் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தைப் புத்துயிர்ப்பிப்பதற்கும், தொழில் வாய்ப்பையும் மற்றும் பெண்களின் சமூகப்-பொருளாதார ஊக்குவிப்பையும் மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கும், முடங்கிக் கிடக்கும் சொத்துக்களை செயலூக்கப்படுத்தி அவற்றை மீளப்பயன்படுத்துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் (SME) மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு உதவுவதற்கும், மீள்புதுப்பிக்கத்தகு சக்தியிலும் மற்றும் ஏனைய வணிக ரீதியில் சாத்தியமான கூட்டுத் தொழில்முயற்சிகளிலும் முதலிடுவதற்கும், திறன் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் மற்றும் இளைஞர் யுவதிகளுக்குக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்தவும்; உள்ளூர் திறனாற்றலை கட்டியெழுப்புவதற்காக முதலீடுகளிலுள்ள சாத்தியமான இடைவெளிகளை ஒழித்தல், நிதிகளின் பயனுள்ள மற்றும் வெளிப்படைத் தன்மைமிக்க பயன்பாடு ஆகியவற்றினை உறுதிப்படுத்தி, தொழில்நுட்ப உதவி வசதியைத் (TAF) தாபிக்க உதவுவதற்கும்; பொருளாதாரச் செயற்பாடுகளிலும் தீர்மானமெடுத்தல் விடயங்களிலும் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டு சகல முதலீட்டுத் துறைகளிலும் பால்நிலையின் உள்ளடக்கும்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும்; இலங்கையின் பிரத்தியேகமான அபிவிருத்தி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒரு அவசர தேசிய நடவடிக்கையாக அந்த நிதியம் தாபிக்கப்படுவதைக் கருத்திற்கொள்வதன் மூலம் கருத்திட்டச் செயற்படுத்துகையில் ஒப்புரவுமிக்க பிராந்திய உள்ளடக்கம், வகைப்பொறுப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நிதியத்தை ஒருங்கிணைக்கக்கூடிய விதத்தில் அந்தந்த அமைச்சுக்களுக்கும் மாகாண சபைகளுக்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் அதிகாரமளிப்பதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 94/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கண்டல் தாவர சூழல்தொகுதியை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— சுற்றுச்சூழல் சமநிலைக்கும் கடற்றொழிலுக்கும் மிக முக்கியமானதாக அமையும் கண்டல் தாவர சூழல்தொகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 97/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்பங்களுக்கு ஊக்கவிப்புத் தொகையை வழங்குதல்,— 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வருடாந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக விழ்ச்சியடைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளதாலும் இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர் சனத்தொகை நிச்சயமாக வீழ்ச்சியடையக் கூடிய வாய்ப்பு உள்ளதாலும் இளைஞர் சனத்தொகை இவ்வாறு வீழ்ச்சியடையும்போது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பாதகமான தாக்கங்கள் ஏற்படக் கூடும் என்பதாலும் இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்ப அலகுகளை கவரக்கூடிய ஊக்குவிப்புத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ‘சூர்யபல சங்ராமய’ கருத்திட்டத்தை மேம்படுத்துதல்,— இலங்கையில் செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் நேயமிக்க வலுசக்தி மூலாதாரமாக சூரிய மின்சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், 2016.09.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ‘சூர்யபல சங்ராமய’ (Battle for Solar Energy) கருத்திட்டத்தின் மூலமாக தற்பொழுது 2000 இற்கும் அதிகமான மெகாவொட் சூரிய மின்சக்தி தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாலும், மின்சார அலகொன்றிற்கான விலையைக் குறைப்பதற்கான முறையியலாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டமாகவும், ‘சூர்யபல சங்ராமய’ கருத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ‘களுத்துறை கடற்கரை வலயத்தை’ விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தல்,— களுத்துறை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வலயமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், களுகங்கையின் கழிமுகத்தையும் கடற்கரையையும் பாதுகாக்கும் உத்தியாகவும், கெலிடோ கடற்கரை மற்றும் களுகங்கையின் கழிமுகம் மாறியதன் காரணமாக புதிதாக உருவாகியுள்ள மேட்டுநிலம் உட்பட ‘களுத்துறை கடற்கரை வலயத்தை’ விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ‘மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயம்’ நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்,— களுத்துறை மாவட்டத்தில், ‘மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை’ (Millaniya Export Processing Zone) நிர்மாணிப்பதற்குத் தேவையான 240 ஏக்கர் காணி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதாலும், அக்கருத்திட்டத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வழிகள், குழாய் நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் இன்றளவில் சுமார் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாலும், மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி மிகப் பொருத்தமானதென இலங்கை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளதாலும், அந்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதனை அரசாங்கத்தின் முதன்மைக் கருத்திட்டமாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ஆங்கில மொழியில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்குவதை மேம்படுத்தல்,— அரசியலமைப்பின் 18(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'ஆங்கில மொழி' இலங்கையின் இணைப்பு மொழியாக (Link Language) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும், சர்வதேச மொழியான 'ஆங்கில மொழி' குடிமக்களுக்கு அறிவைப் பெறுவதற்கான பிரதான மூலோபாயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதாலும், எந்தவொரு மொழியியல் அல்லது இனப் பாகுபாடும் இல்லாமல் ஒரு நாட்டில் வாழ்வதற்குத் தேவையான இணைப்பு மொழியாக ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் முக்கியமானதென்பதாலும், இலவசக் கல்வி எண்ணக்கருவின் கீழ் தோன்றிய இலங்கையின் மத்திய மகா வித்தியாலயக் கட்டமைப்பிற்குள்ளும் இன்னும் பல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்கும் முறையியல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கைக் குடிமக்கள் சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பது மிகவும் முக்கியமானது என்பதாலும், இலங்கையிலுள்ள அனைத்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் (Secondary Schools), 'ஆங்கில மொழி' மூலம் (English Medium) கல்வியை வழங்க வேண்டுமெனவும் அதற்கெனப் போதுமானளவு முதலீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவுதல்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் நிர்மாணம், இயந்திரவியல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/2025

கௌரவ ரோஹண பண்டார,— நீச்சல் திறமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல்,— நீரிழ் மூழ்கி உயிரிழக்கும் ஆட்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாலும், மிகச் சிறந்த நீர்ப்பாசன நாகரீகத்திற்கு உரிமைகூறும் பண்டைய கால மக்கள் மத்தியில் காணப்பட்ட நீச்சல் திறமைகளை, இன்றைய பரம்பரையினர் மத்தியிலும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 106/2026

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவுதல்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் மருத்துவத்துறை உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற்கொண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, பெப்ரவரி 06, வெள்ளிக்கிழமை)**

1588/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1594/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1601/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2018 நவம்பர் 09 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1614/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1630/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மரண தண்டனை விதிக்கப்பட்டு, அது தொடர்பான அனைத்து மேன்முறையீடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ள, அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படாத சிறைக் கைதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சிறைக்கைதியினதும் பெயர் மற்றும் வயது வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) 1976 ஆம் ஆண்டிற்கு பிறகு, சனாதிபதியினால் மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கான கட்டளை பிறப்பிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) சில சந்தர்ப்பங்களில், அரசியலமைப்பின் 34(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியால் மரண தண்டனையானது ஆயுள் தண்டனையாக மாற்றப்படுகிறது என்பதையும்;

(iii) அச்செயன்முறையானது ‘தற்சார்பற்ற அடிப்படையில்’ அன்றி, முறையற்ற விதமாக ‘தனிநபர் அடிப்படையில்’ மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி செயன்முறையினை ‘தற்சார்பற்ற அடிப்படையில்’ மேற்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மரண தண்டனையானது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டதன் பின்னர், அச்சிறைத் தண்டனையை அமுல்படுத்தும் விடயம் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் அதன் பின்னர் அச்சிறைத் தண்டனை நிறைவடைதல் தொடர்பான ஏற்பாடுகள் ஆகியவற்றை முறைமைப்படுத்துவதற்காக, சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ‘ஒழுங்கு விதிகளை’ ஆக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 105/2026

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ ஜகத் விதான

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ கயந்த கருணாதிலக்க,— தித்வா புயலை எதிர்கொள்வதற்காக முன்னாயத்தத்துடன் இருக்கவில்லை என்பது தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கை வரலாற்றில் மிக மோசமான பேரழிவாக கருதப்படுகின்ற தித்வா புயலால் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம், பொருட்சேதம் மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இதுவரை மதிப்பீடு செய்யப்படாதிருப்பதாலும்;

அண்மைக்காலத்தில் இதுபோன்ற இரண்டு பேரிடர்கள் அதாவது, உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட தருணங்களிலும் பாராளுமன்ற விசேட குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும்;

இதுவரையில் நிகழ்ந்துள்ள பேரிடர்களில் இந்தப் பேரிடர் தனித்துவமான ஒன்றாக நம்பப்படுவதாலும்;

இந்த மோசமான பேரிடர் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களமும் வெளிநாட்டு ஊடகங்களும் அவ்வப்போது முன்னெச்சரிக்கை விடுத்து எதிர்வுக்கூறல்களை வெளியிட்டிருந்ததாக ஏற்கனவே பாராளுமன்றத்தில் வெளிக்கொணரப்பட்டிருப்பதாலும்;

இந்த நிலைமையை எதிர்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்னாயத்தத்துடன் இருந்திருந்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை குறிப்பிடத்தக்க அளவில் தவிர்த்துக்கொள்வதற்கான சாத்தியப்பாடு இருந்ததாலும்;

தித்வா புயலை எதிர்கொள்வதற்காக முன்னாயத்தத்துடன் இருக்கவில்லை என்பது தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ தடைபெறாது கூடுவதற்கும்,

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.